**இலங்கை பிணைகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு - 2020**

---

## 1.1 அபிப்பிராயம்

இலங்கை பிணைகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ("ஆணைக்குழு") 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

ஆணைக்குழுவின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.
அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு ஆணைக்குழுவிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது

நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- ஆணைக்குழு அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- ஆணைக்குழுவின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதி அறிக்கைகளின்படி, 2020 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை பிணைகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் செயற்பாடுகள், தேறிய செயற்பாட்டுச் செலவினத்திற்காக செஸ் நிதியத்திலிருந்து மாற்றீடு செய்யப்பட்ட தொகையினை கணக்கிலெடுப்பதற்கு முன்னர் ரூபா 385.2 மில்லியன் பற்றாக்குறையை ஏற்படுத்தியிருந்ததுடன் முன்னைய ஆண்டின் நிதிப் பற்றாக்குறை ரூபா 375.4 ஆகும். சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிப் பற்றாக்குறை ரூபா 9.8 மில்லியன் அல்லது 14.4 சதவீதம் அதிகரித்தமைக்கான முக்கிய காரணம் நிதித்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் ரூபா 11.7 மில்லியன் பெறுமதியான மானியம் குறைக்கப்பட்டமையே ஆகும்.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

சென்ற ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ஆணைக்குழுவின், முக்கிய வருமானம் மற்றும் செலவினப் பொருட்களின் பகுப்பாய்வு கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2020 | 2019 | வேறுபாடு சதவீதத்தில் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| **ஆணைக்குழுவின், வருமானம்** | | | |
| வட்டி வரி | 5,360,805 | 3,728,019 | 43.79 |
| அரசாங்க மாணியம் | 11,720,560 | 81,124,254 | (85.55) |
| **ஆணைக்குழுவின் செலவினம்** | | | |
| பதவியணியினர் சம்பளம் | 132,419,676 | 128,380,689 | 3.15 |
| விசேட கொடுப்பனவுகள் | 16,606,045 | 16,812,135 | (1.23) |
| பதவியணியினர் வாகன கொடுப்பனவு | 23,298,500 | 22,344,097 | 4.27 |
| பதவியணியினர் மருத்துவ செலவுகள் மற்றும் காப்புறுதிச் செலவினம் | 7,914,882 | 6,962,971 | 13.67 |
| பதவியணியினர் நலனோம்பல் | 4,052,758 | 5,896,137 | (31.26) |
| வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் பிரயாணங்கள் | 2,309,872 | 13,547,075 | (82.95) |
| வாடகை மற்றும் வாகன நிறுத்துமிட வாடகை | 96,216,435 | 88,188,786 | 9.1 |
| மூலதனச் சந்தை அபிவிருத்திச் செலவினம் - மொத்தம் | 32,376,005 | 53,736,624 | (39.75) |
| • மூலதனச் சந்தையும் உற்பத்திப்பொருள் அபிவிருத்தியும் | 16,920,166 | 24,669,537 | (31.41) |
| • பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 1,354,648 | 13,407,274 | (89.9) |
| • கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் | 1,609,193 | 3,480,812 | (53.77) |
| • சர்வதேச அங்கத்துவக் கட்டணம் – IOSCO | 3,684,862 | 3,730,324 | (1.22) |
| • பிரச்சாரம் மற்றும் விளம்பரம் | 0 | 482,114 | (100) |
| • சந்தை ஆராய்ச்சிக் கிரயம் | 8,795,002 | 7,878,105 | 11.64 |
| • புலனாய்வு மற்றும் களப்பரிசோதனைச் செலவினம் | 3,134 | 88,458 | (96.46) |

(அ) உலக வங்கியினால் நிதியளிக்கப்பட்ட நிதித்துறை நவீனப்படுத்தல் செயற்திட்டத்தின் கீழான 11 அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களிற்காக ஏறத்தாழ ஐக்கிய அமெரிக்க டொலர் 10 மில்லியன் தொகையை ஆணைக்குழு பெற தக்கதாக உள்ளது. மீளாய்வாண்டின் இறுதியில், செயற்திட்டத்தின் பெறுபேற்று அடிப்படை நிதிக்கூறின் ஒரு பகுதியாக ரூபா 92.84 மில்லியன் (2019 இல் ரூபா 81,124,254 மற்றும் 2020 இல் ரூபா 11,720,560) ஆணைக்குழு பெற்றது. 2019 ஆம் ஆண்டு ரூபா 1 மில்லியன் பொதுச் செலவினம் மேற்கொள்ளப்பட்டமை தவிர்ந்து பெறுபேறு அடிப்படை நிதிக்கூற்று தொடர்பில் வேறு எந்த செலவினத்தையும் செய்யவில்லை. அதன்படி, பெறப்பட்ட தொகை மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டு மற்றும் முந்தைய ஆண்டுக்கான வருமானமாக (அரசாங்க மானியம்) அங்கீகரிக்கப்பட்டது. மேலும், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் முதலீட்டுத் திட்ட நிதிக்கூற்றுக்களின் ஒரு பகுதியாக ரூபா 558,060 பெறப்பட்ட போதிலும் 2020 ஆம் ஆண்டில் குறிப்பிடப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மூலதனச் சந்தை மற்றும் உற்பத்திப்பொருள் அபிவிருத்திச் செலவினம் ரூபா 16.9 மில்லியன் ஆகும். இதில் முக்கியமாக ரூபா 16.8 மில்லியன் அல்லது 99.4 சதவீதம் தரகர் பின் அலுவலக முறைமை (BBO) மற்றும் கட்டளை முகாமைத்துவ முறைமைக்கு (OMS) செலவு செய்யப்பட்டது.

(இ) 1987 இன் 36 ஆம் இலக்க (SEC Act) பிணைகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் 14(பி)(2)(அ) பிரகாரம், பிணைகள் சந்தையின் அபிவிருத்திக்காக இச்சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள செஸ் வரியிலிருந்து செலுத்த அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, மீளாய்வாண்டில் மேற்கொண்ட மொத்தச் செலவினத்தில் 7.4 சதவீதமொன்று பிணைகள் சந்தையின் அபிவிருத்திச் செயற்பாட்டுக்காக செலவிடப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டில் இதற்காக 11.8 சதவீதம் செலவிடப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| அ. | புலனாய்வுப் பிரிவினால் கையாளப்பட்ட 32 வழக்குகளில் 11 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளது மற்றும் 2013 ஜுலை முதல் 2019 அக்டோபர் வரை பதிவு செய்யப்பட்ட 21 விசாரணைகள் மதிப்பாய்வு ஆண்டின் இறுதியில் நடைபெற்று வருகின்றது. | 30 செப்டெம்பர் 2021 க்குள் விசாரணைப் பிரிவு 9 விசாரணை அறிக்கைகள் மற்றும் பிற அறிக்கைகளை ஆணைக்குழுவின் கண்காணிப்பு மற்றும் விசாரணைக் குழுவிடம் சமர்ப்பிக்க முடிந்தது. இதன் விளைவாக 2020 ஆம் ஆண்டில் புலனாய்வு பிரிவிளால் கையாளாப்பட்ட 32 விசாரணைகளில் 2021 செப்டெம்பர் 30 வரை 12 விசாரணைகள் மட்டுமே நடைபெற்றன. அந்த 12 விசாரணைகளில் 5 இறுதிக் கட்டத்தில் உள்ளது. எஞ்சிய 7 விசாரணைகள் நியாயமான காலத்திற்குள் முடிக்க பிரிவு திட்டமிட்டுள்ளது. | நிலுவையிலுள்ள விசாரணைகளை முடிப்பதற்கான செயல் முறைமையை விரைவுப்படுத்துங்கள். |
| ஆ. | 2018 இன் முதலாவது காலாண்டின் இறுதியில் மத்திய கருமபீட தரப்பு பொறிமுறை (CCP) விநியோக எதிர் கொடுப்பனவு (DvP) முறையினை தொடர்ந்து அமுல்ப்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்தது. இது 2019 முதல் காலாண்டு வரை நீடிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், DvP தீர்ப்பனவு மாதிரி 2020 டிசம்பர் 31 இல் நடந்து கொண்டிருந்தது. | கொழும்பு பங்குச் சந்தையை செயற்படுத்தும் (CSE) முகவர் மற்றும் ஆணைக்குழு நிதித்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் (FSMP) கீழ் நியமிக்கப்பட்ட Dvp நிபுணருடன் கலந்தாலோசித்து CSE க்கு கொள்கை அளவிலான வழிகாட்டுதலை வழங்குவதன் மூலம் இந்த முயற்சியை எளிதாக்கின்றது. இருப்பினும் கொவிட் - 19 தொற்று நோய் காரணமாக, தேவையான வன்பொருள் மற்றும் பிற தேவைகளை இறக்குமதி செய்வதற்கான கனிசமான நேரம் எடுப்பதன் காரணமாக செயற்படுத்தும் செயல் முறை எதிர்பார்த்ததை விட அதிக நேரம் | DVP செயற்படுத்தலை முடிக்க பின்தெடரும் செயல்முறையை விரைவுபடுத்தவும். |

| | | | |
|---|---|---|---|
| | | எடுக்கப்பட்டது.<br>இருந்தபோதிலும், ஆணைக்குழு ஆரம்பத்திலிருந்தே தேவையான விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளை அங்கீகரிப்பதன் மூலமும் உரிய மேற்பார்வைச் செயல் பாட்டைச் செய்வதன் மூலமும் DVP செயலாக்கத்தை உடனடியாக பின் தொடர்ந்தது. Dvp முறைமை மற்றும் மேம்படுத்தப்பட்ட மாதிரி எல்லையை CSE ஆனது செயல்படுத்தி முடித்ததுடன் 2021 ஆகஸ்ட் 16 அன்று நேரலைக்கு வந்தது.<br>மேலும், அரசாங்கப் பத்திரங்களுக்கான CCPயை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அத்தகைய செயல் முறை முடிந்ததும், CBSL ஆனது பங்குப் பத்திரங்களுக்கான CCP ஐ நீடிப்பதன் மூலம் SEC யில் ஏற்பாடு செய்யும் என்று இலங்கை மத்திய வங்கி (CBSL) மீண்டும் வலியுறுத்தியது. | |
| இ. | மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான மூலதனச் சந்தை மற்றும் தயாரிப்பு மேம்பாட்டிற்கு ரூபா 53.5 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது விதிக்கப்பட்ட செஸ் தொகையை செலுத்த 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க SEC சட்டத்தின் 14 பி 2(அ) பிரிவின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது மற்றும் மேற்படி சட்டத்தின் கீழ் ரூபா 16.9 மில்லியன் அல்லது 32 சதவீதம் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் மேற்கூறிய நோக்கத்திற்காக மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. | 2020 ஆம் ஆண்டில் நிலவிய கொவிட் - 19 தொற்று நோய் காரணமாக சாலைக் காட்சிகள் (ரூபா 8 மில்லியன்) மற்றும் யூனிட் அறக்கட்டளைகளுக்கான விளம்பர பிரச்சாரம் (ரூபா 10 மில்லியன் பாதீட்டு) நடத்தப்படவில்லை. CCP திட்டம் தொடர்பான ஆலோசனைக் கட்டணம் (பாதீடு ரூபா 12.5 மில்லியன்) - CSE க்கு இந்தக் கட்டணத்தைச் செலுத்த வேண்டாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது.<br>▪ தரகர் பின் காரியாளயம் மற்றும் கட்டளை முகாமை முறைமை (BBO & OMS) (பாதீடு ரூபா 23 மில்லியன், உண்மை ரூபா 16.9 மில்லியன்) – தரகு நிறுவனங்களால் BBO & OMS ஐச் செயற்படுத்துவதற்கான CSE ஆல் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆதார ஆவணங்களின் அடிப்படையில் நிதி திருப்பிச் செலுத்தப்படுகின்றன.<br>▪ அதன்படி, CSE வழங்கிய ஆதார ஆவணங்களின் அடிப்படையில் 2020 ஆம் ஆண்டில் ஆணைக்குழு CSE க்கு ரூபா 18.6 மில்லியனை | மூலதனச் சந்தையை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை கொடுங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | திருப்பிச் செலுத்தியுள்ளது. இருப்பினும், மீதமுள்ள நிதியைத் திருப்பிச் செலுத்த CSE தேவையான ஆதார ஆவணங்களை SEC க்கு வழங்க வேண்டும். | |
| ஈ. | 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க SEC சட்டத்தின் 14 பி 2(அ) பிரிவின் மூலம் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் செஸ் தொகையிலிருந்து செலுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட பொது விழிப்புணர்வுக்காக ரூபா 24.1 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூபா 1.4 மில்லியன் அல்லது 5.8 சதவீதம் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் மேற்கூறிய நோக்கத்திற்காக மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. | 2020 ஆம் ஆண்டிற்கான வெளிநாட்டு உறவுகள் பிரிவு திட்டமிட்டு பாதீடு செய்த முதலீட்டாளர்கள் அவுட்ரீச் திட்டங்களுக்கு கொவிட் - 19 தொற்று நோய் இரண்டு பூட்டுதல் கட்டுப்பாடுகளை விதித்தது. பிரிவு முக்கியமாக சமூக ஊடகங்கள் வழியாக ஆன்லைன் முதலீட்டாளர்கள் விழிப்புணர்வு திட்டங்களை நாட வேண்டியிருந்தது மற்றும் உள்ளடக்கம் எம்மால் வடிவமைக்கப்பட்டதுடன் இது செலவைக் குறைக்க வழிவகுத்தது. | மூலதனச் சந்தையை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும். |
| உ. | 2017ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு வருவாய்ச் சட்டத்தின் படி, ஆணைக்குழு அதன் நிதியமும் 2018 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் வருமான வரிக்கு பொறுப்பாகும். இருப்பினும், 2018/2019 மற்றும் 2019/2020 ஆம் மதிப்பீட்டாண்டுகளிற்கான வருமான வரி 2020 நவம்பர் மற்றும் 2021 பெப்ரவரி இல் ஆணைக்குழுவினால் செலுத்தப்பட்டுள்ளது. இதன்படி, அந்தந்த வருட மதிப்பீடுகளுக்கான வரிகளை செலுத்துவதில் ஏற்பட்ட தாமதத்திற்காக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் அபராதம் விதிக்க வாய்ப்பு உள்ளது. | உள்நாட்டு இறைவரி மற்றும் பொதுத் திறைச்சேரியின் நிதிக் கொள்கைத்துறை திணைக்களம் ஆகியவற்றிலிருந்து முந்தைய உள்நாட்டு வருவாய்ச் சட்டத்தின் கீழ் கிடைத்ததைப்போல், 2017 ஆம் ஆண்டின் புதிய உள்நாட்டு இறைவரி ச்சட்ட இலக்கம் 24 இன் படி, வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்க ஆணைக்குழு கோரியது.<br>வரி விலக்கு நிலை குறித்த எங்கள் கோரிக்கைகளை தெளிவுபடுத்தும் வகையில், நிதிக் கொள்கைத் துறையின் இறுதிப் பதில்கள் 2020 நவம்பர் 09 அன்று பெறப்பட்டன. சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் விளக்கங்களுக்காக காதித்திருந்ததால் பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டது, வருமானவரி விபரத்திரட்டை நிரப்பும் போது பணம் செலுத்தாதற்கான காரணம் ஐஆர்டி (IRD) க்கு தெரிவிக்கப்படதால் அபராதம் விதிக்கப்படுவதற்கான வாய்புக்கள் மிகவும் குறைவாக இருப்பதாக ஆணைக்குழு நம்புகின்றது. | கெடுப்பனவுகளை மேற்கொள்வதில் வருமான வரிச் சட்டங்களுக்கு இணங்கவும். |

## 3.2 மனித வள (HR) முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| அ. | 1987 இன் 36 ஆம் இலக்க பிணைகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டத்தின் 43 (2) ஆம் பிரிவின் படி, நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அத்தகைய முறைகளிலும் அத்தகைய கட்டணங்களிலும் ஊதியம் வழங்கப்பட வேண்டியதுடன் அத்தகைய சேவை நிபந்தனைகளுக்குட்பட்டு ஆணைக்குழு உறுப்பினர்களால் தீர்மாணிக்கப்படும். மேலும், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் 1992 மார்ச் 31 திகதி கடிதத்தின் படி, ஏனைய அரசாங்க விதிமுறைகளைக் கருத்தில் கொள்ளாமல், ஆணைக்குழு தனது ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கும் அவர்களின் சம்பளம், மற்றும் பிற ஊதியங்களை நிர்ணயிப்பதற்கும் சிறப்புரிமை பெற்றுள்ளது.<br><br>அதன் படி, ஊழியர்களின் சம்பள அளவு மற்றும் சிறப்பு வாழ்க்கை கொடுப்பணவு, மாதாந்த கொடுப்பனவு, ஊழியர்களின் மருத்துவ செலவுகள், ஊழியர்களின் வாகன கொடுப்பனவு போன்ற பிற ஊதியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்களால் அவ்வப்போது தீர்மாணிக்கப்படும்.<br><br>2018 செப்டெம்பர் 18 ஆந் திகதியிடப்பட்ட பொது நிறுவனங்களுக்கான குழுவின் (COPE) பரிந்துரையின் படி, ஆணைக்குழு அதன் ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் மற்றும் ஊதியங்கள் தொடர்பாக தேசிய சம்பளங்கள் மற்றும் பணிப்பாளர் ஆணைக்குழுவின் ஒப்புதலை பெற வேண்டும். இருப்பினும் ஆணைக்குழுவினால் 2021 | மேற்படி விடயம் தொடர்பாக சட்டமா அதிபரிடமிருந்து ஆணைக்குழு சட்டக் கருத்தை கோரியதுடன் அதற்கு பதிலாக சட்டமா அதிபர் ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்பு மற்றும் ஊழியர்களின் ஊதியம் தொடர்பாக தீர்மானங்களுக்கு சட்டப்படி முன் அனுமதியோ அல்லது அனுமதியோ பெற வேண்டிய அவசியம் இல்லை என அறிவுறுத்தியுள்ளனர். | COPE பரிந்துரைகளுக்கு இணங்குக. |

| | | | |
|---|---|---|---|
| | செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையில் அத்தகைய இணக்கம் பெறப்படவில்லை. | | |
| ஆ. | 2018 ஜனவரி 22 இல் ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 96 ஆக இருந்ததுடன் மேற்படி பணியினருக்கான அனுமதியானது முகாமைத்துவ சேவை திணைக்களத்தில் பெறப்பட்டிருந்தது.<br><br>2018 ஜனவரி 22 ஆம் திகதி அன்று நடைபெற்ற 404 வது ஆணைக்குழு கூட்டத்தில், ஆணைக்குழுச் சபை உறுப்பினர்களால் ஊழியர்கக் குழு முடிவுகளை ஆமோதிக்கப்பட்பது “திறைசேரி செயலாளரால் 1992 மார்ச் 31இல் வெளியிடப்பட்ட ஆணையின் அடிப்படையில் ஆணைக்குழுவிற்கு சுதந்திரமாக ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு முடிந்தால் முழு ஆணைக்குழு ஆளணி அமைப்பையும் ஆணைக்குழு முடிவு செய்ய வேண்டும் என்பதும் கடந்த காலத்தில் நடைமுறையில் இருந்த அனுமதிபெறும் முறைமையை ஆணைக்குழு நிறுத்த வேண்டும் என்பதும் தெளிவாகின்றது. அதன்படி, ஆணைக்குழுவின் ஆளணி எண்ணிக்கை 96 இலிருந்து 137 ஆக அதிகரிக்கப்பட்டது.<br><br>எவ்வாறாயினும், 2018 ஜுலை 18 திகதியிடப்பட்ட முகாமைத்துவ சேவை சுற்றிக்கை இலக்கம் 03/2018 இன்படி பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் அனுமதியைப் பெறாமல் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதையும் அவர்களது ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிப்பதையும் தவிர்க்க வேண்டும். ஆனால், 41 ஆக அதிகரிக்கப்பட்ட ஆளணிக்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திடமிருந்து | மேற்படி விடயம் தொடர்பாக சட்டமா அதிபரிடம் ஆணைக்குழு சட்டக் கருத்தை கோரியதுடன், அதற்கு பதிலளித்த சட்டமா அதிபர் ஆணைக்குழுவின் அட்சேர்ப்பு மற்றும் ஊழியர்கள் ஊதியம் தொடர்பான தீர்மாணங்களுக்கு சட்டபடி எவ்வித முன் அனுமதியோ அல்லது அனுமதியோ பெற வேண்டிய அவசியம் இல்லை என அறிவுறுத்தியுள்ளனர். | தொடர்புடைய சுற்றறிக்கைக்கு இணங்கவும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆணைக்குழுவினால் அத்தகைய அங்கீகாரம் பெறப்படவில்லை. | | |
| இ. | 2018 ஜனவரி 22 இல் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியின் கீழ் உள்ள துணை இயக்குநர் நாயகம், இயக்குனர் மூலதன சந்தை அபிவிருத்தி, புலனாய்வுகள் இயக்குனர், மனிதவள இயக்குனர், மேற்பார்வை இயக்குனர், மற்றும் உதவி நீதி இயக்குனர் மற்றும் அமுலாக்கல் மற்றும் உதவி பணிப்பாளர் மூலதன சந்தை அபிவிருத்தி ஆகிய பதவிகள் 2020 டிசம்பர் 31 ஆம் திகதி வரை காலியாக இருப்பது அவதானிக்கப்பட்டது. | ஆணைக்குழுவின் தற்போதைய ஊதிய கட்டமைப்பு அல்லது தேவையான தகைமைவாய்த பொருத்தமான விண்ணப்பதாரர்களைக் கண்டு பிடிக்க இயலாமை காரணமாக அனைத்து காலியிடங்களையும் நிரப்புவது சவாலானதாக இருந்தாலும், இயக்குநர் மூலதன சந்தை அபிவிருத்தி, இயக்குநர் விசாரணைகள், இயக்குநர் மேற்பார்வை, இயக்குநர் மனித வளம் உள்ளிட்ட மூத்த நிர்வாக பதவிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்ப ஆணைக்குழு இன்று வரை பல நேர்காணல்களை நடத்தியது. நிறுவனததின் செயல்பாட்டுத் தேவைகளைப் பொறுத்து காலியிடங்களை நிரப்ப தேவையான நடவடிக்கைகளை தொடர்ந்து ஆணைக்குழு எடுக்கும். | மூத்த நிர்வாக பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு செயல் முறையை விரைவுபடுத்துங்கள். |
| ஈ. | ஆணைக்குழுவில் இணைக்கப்பட்ட அதிகாரி ஒருவர் 19 ஏப்ரல் 2016 முதல் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். எனினும், போக்குவரத்துக் கொடுப்பனவுகள் மற்றும் இதர சலுகைகள் தவிர்ந்து அவரது மாதாந்த மொத்த சம்பளத்தில் பாதிக்கு சமனான தொகையானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு தாபனச் சட்டத்தின் துணைப்பிரிவு 31.11 இற்கு முரணாக செலுத்தப்பட்டது. 2016 ஏப்ரல் 20 முதல் 2018 ஒகஸ்ட் 31 வரை அவர் சார்பாக ஆணைக்குழுவிற்கு ஏற்பட்ட அரைமாத சம்பள செலவு ரூபா 5,212,815 ஆகும். 2018 செப்ரம்பர் 18 திகதி பொது நிர்வாகங்களுக்கான கோப் (COPE) குழுவின் பரிந்துரையின் படி, ஆணைக்குழு சம்பளம் கொடுப்பதை நிறுத்திவிட்டு மொத்த ஊதியத்தை திரும்ப பெற ஏற்பாடு செய்ய வேண்டும். அதன்படி, 2018 செப்டெம்பர் முதல் அரைமாத சம்பளம் வழங்குவது | இடைநிறுத்தப்பட்ட ஊழியருக்கு அரைமாதச் சம்பளத்தை வழங்குவதை ஆணைக்குழு நிறுத்தியுள்ளது. மற்றும் 2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த நிதி நிலை அறிக்கைகளில் பெறத்தக்க இருப்பு தொகையாக செலுத்தப்பட்ட தொகையை அங்கீகரித்துள்ளது. மேலும், ஆணையம் ஏற்கனவே கடிதங்கள் மூலம் நினைவூட்டல்களை அனுப்பியுள்ளது. மேற்கூறிய தொகை ரூபா 5.2 மில்லியன் ஆணையகத்திற்கு அவரால் ஒப்புதல் கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் அவர் இன்று வரை பணத்தை வைப்பு செய்யவில்லை. | COPE இன் பரிந்துரையின் படி செலுத்த ப்பட்ட மொத்த சம்பளத்தை மீட்டெடுப்பதற்கான செயல் முறையை விரைவுபடுத்துங்கள். |

நிறுத்தப்பட்டதுடன் மேலே குறிப்பிட்ட தொகையை 2018 நவம்பர் 15 திகதி கடிதம் மூலம் திருப்பி செலுத்துமாறு அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டது. இருப்பினும், 2020 டிசெம்பர் 31 வரையிலும் ஆணைக்குழுவினால் அது அறவிடப்படவில்லை.

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 32 சதவீதம் முதல் 175 சதவீதம் வரையிலான குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் 14 பாதிடப்பட்ட மற்றும் உண்மையான செலவுப் பொருட்களில் காணப்பட்டன. இது வரவு செலவுத்திட்டம் நிர்வாகக் கட்டுப்பாட்டின் பயனுள்ள கருவியாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதைக் குறிக்கின்றது. | அறிக்கையிடல் திகதியின் படி உண்மையான மதிப்பீட்டில் அனுமானங்களின் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக, உண்மையான ஓய்வூதிய கொடுப்பனவு செலவு பாதீட்டை விட அதிகமாக இருந்தது.<br>கொவிட் 19 தொற்று நோயின் தாக்கம் காரணமாக நிர்வாக வாழ்வாதாரம், ஆட்சேர்ப்பு விளம்பரம் தொடர்பான செலவுகள் குறைக்கப்பட்டன. 2020 ஆம் ஆண்டில் புதிய SEC சட்டத்தின் மீது திறன் மேம்பாட்டிற்காக பாதீட்டு செய்யப்பட்ட தொகை செலவிடப்படவில்லை. | நிர்வாகக் கட்டுப்பாட்டின் பயனுள்ள கருவியாக பாதீட்டை பயன்படுத்த வேண்டும் |